
வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
ஆசைப்
பத்து...
அருள்நிதி மன்னார்குடி
பானுகுமார்.
• டிசைன் ~ தவம் ஆர்ட்ஸ் •

# வேதாத்திரியப் பார்வையில்

# திருவாசகத்தின் ஆசைப் பத்து

# அருள்நிதி

# மன்னார்குடி பானுகுமார்

இதனுள்ளே....


1. மாணிக்கவாசகரின் ஆசை? https://youtu.be/PbD904d8PMY
2. பரநிலை என்ற அருளைப் பெறவேண்டுமா? https://youtu.be/UOwY-oTVOsQ
3. ஊனுடம்பும் அமிர்தசொரூபமே. https://youtu.be/Dnc9M9ofFQA
4. உடல் எடுத்ததன் பெருநோக்கம் என்ன? https://youtu.be/bCKa37oi-WA
5. சரீரத்தோடிருப்பினும் அவன் முக்தனே. https://youtu.be/PfXYeGk19Dk
6. அன்பும் கருணையும் உடையது இறைநிலை https://youtu.be/WYC4aAs4PNk
7. இவ்வாழ்க்கை ஏன் வைத்தாய்? https://youtu.be/_X2GA2R5eSA
8. தெவிட்டாத அமுதமே! https://youtu.be/xehZ31SRSFM
9. மனம் உருக அகத்தவம் செய்வீர் https://youtu.be/97o4tYbDOpc
10. மெய்ப்பொருள் இன்பம் https://youtu.be/97fdWWfgqvQ
11. அஞ்சுவதேன் துணிந்துரைப்போம்! HTTPS://YOUTU.BE/FBB4BZDLWG4


## 1.மாணிக்கவாசகரின் ஆசை?

திருமந்திரப் பாடலில் வரும் “ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்கள்” என்ற வரிகளுக்கு, ஈசனிடமும் ஆசை கொள்ளாதீர்கள் என தவறாகப் பொருள் கூறி வருகிறார்கள் சிலர்.

‘ஈசனோடு’ என்ற சொல்லைக் கவனிக்க வேண்டும். சுவாமியோடு இருப்பதாகிய கயிலைப் பதவி கிடைத்தும் கூட சிலர் உலக விஷயங்களில் ஆசை கொண்டு விடுகிறார்கள். (உலக ஆசை அவ்வளவு வலியது)

இதனால், கயிலைப் பதவியை இழந்து மீண்டும் பூமியில் பிறப்பதாகிய இன்னலுக்கு ஆளாகிறார்கள்.

சிவனின் அணுக்கத் தொண்டராக இருந்த சுந்தரர், உமாதேவியின் தோழிகள் மீது ஆசை கொண்டதால் தான் பூமியில் பிறக்க நேரிட்டது.

ஈசனோடு இருந்தாலும் ஆசை ஏற்பட்டால் பிறவித் துன்பம் ஏற்பட்டு விடும் என்பதை வலியுறுத்தவே திருமூலர் இவ்வாறு கூறியுள்ளார்.

உலக விஷயங்களை வெறுத்து ஆசையை அறுத்து துறவிகளாக மாறுபவர்களும் மனதளவில் இறைவனோடு ஒன்றியிருப்பதாகத் தான் பொருள்.

ஆனால், இவர்களில் சிலர் கூட கீழ்த்தரமான ஆசை கொண்டு நெறி தவறி விடுவதால் துன்பத்துக்கு ஆளாவதைத் தான் அடிக்கடி படிக்கிறோமே?

இது போன்றவர்களை எச்சரிக்கவும் தான் திருமூலர்,"ஆசை அறுமின்காள்! ஆசையை அறுமின்காள் ! ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்காள்!" என்று அற்புதமாகப் பாடியுள்ளார்.

"ஆசை அறுமின் கள் ஆசை அறுமின் கள்
ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்கள்
ஆசைப் படப் பட ஆய் வரும் துன்பங்கள்
ஆசை விட விட ஆனந்தம் ஆமே"

மாணிக்கவாசகர், இறைவன் திருவருளைப் பெற ஆசையுற்றமையை அருளிச் செய்த பதிகம். ஆத்தும இலக்கணம்.

ஆன்மாவின் சொரூப இலக்கணம். அஃதாவது, இறைவனை அடைய விரும்புவதே ஆன்மாவின் இயற்கை என்பதைக் கூறுவதாம்.

ஆன்மாவின் இலக்கணத்தை அறிந்து பெற்ற உலகச் சார்பை விட்டுப் பெறவேண்டிய அருட்சார்பை விரும்பி அருள் வழங்கப் பெற ஆசைப்படுவது.

மாணிக்க வாசகருக்கு இறைவனது செவ்வி காணவும்,

செவ்வியில் ஈடுபட்டு அழுந்தி நிற்கின்ற பொழுது அருளைப் பெறவும்,

அருளை விரும்புகின்ற என்னைப் பார்த்து இரங்கி வா வா என்று உன்னால் அழைக்கப் பெறவும்,

அழைத்தாலும் வரமுடியாமை என்பால் இருப்பதை அறிந்து நீயே என்பால் எழுந்தருளி வந்து அருள் வழங்கப் பெறவும்,

ஆசைப்படுவதாக அறிவிப்பதால் இப்பத்துப் பாடல்களும் ஆசைப்பத்து எனப் பெயர் பெற்றது.

## 2. பரநிலை என்ற அருளைப் பெறவேண்டுமா?

“ஜீவாத்மா, பரமாத்மா என்ற இரண்டின் சேர்க்கையானது, ஒரு கடிகாரத்தில் மணிக்கொருதரம் மணியைக் காட்டும் முள்ளும் நிமிஷத்தைக் காட்டும்முள்ளும் சேர்வதை ஒக்கும்.

சாதாரணமாக அவை தனித்திருப்பினும் தகுதியான சந்தர்ப்பங்கள் வாய்க்கும் போதெல்லாம் ஒன்று சேரும். அங்ஙனம் ஜீவாத்தமா பரமாத்மாவைச் சேரவேண்டும்.” (ஶ்ரீ இராமகிருஷ்ணர் உபதேசம்.)

“கருடக் கொடியோன் காண
 மாட்டாக் கழற்சேவடி என்னும்
பொருளைத் தந்து இங்கு என்னை
 ஆண்ட பொல்லா மணியேயோ
இருளைத் துரந்திட்டு இங்கே
 வா என்று அங்கே கூவும்
அருளைப் பெறுவான் ஆசைப்
 பட்டேன் கண்டாய் அம்மானே”. (திருவாக.பா.418)

வேண்டுவனவற்றையெல்லாம் தர வல்லனவாதலின், கழற் சேவடியைப் ‘பொருள்’ என்றார்.

இருள் என்றது, இங்கு, இறைவனோடு உடன் சென்று அனுபவிக்கும் இன்பத்தை விரும்பாமல், இவ்வுலகத்தில் இருந்து வாழ விரும்பியதேயாகும்.

‘இப்படிப்பட்ட எனது அறியாமையை நீக்கி, ‘நீ என் அருகில் வா’ என்று அன்போடு அழைத்து, எனக்கு உன் வீட்டுலகத்தைத் தர வேண்டும்’ என்பார்.

‘இங்கே வா என்று அங்கே கூவும் அருள்’ என்றார். ‘கண்டாய்’ முன்னிலை அசை.

இதனால், உலக மாயையை முற்றிலும் நீக்க வல்லவன் இறைவனே என்பது கூறப்பட்டது.

அறியாமை ஆகிய இருட்டை ஓடுமாறு விரட்டி விட்டு, “இங்கே வா!” என்று, அங்கிருந்து அழைக்கும் அருளைப் பெறுவதற்கு ஆசைப்படுகிறேன் என்று மாமணிக்கவாசகர் ஆசைப்படுகிறார்.

பரநிலை என்ற அருளைப் பெற என்ன செய்ய வேண்டும்? விடா முயற்சி வேண்டும் என்கிறது வேதாத்திரியம்.

புதிதாக தவப் பயிற்சி ஏற்ற அன்பர்கள் தவத்தின் போது நினைவு ஓடுகிறது, எண்ணங்கள் பல எழுகின்றன, இதைத் தடுக்க என்ன செய்ய வேண்டுமெனக் கேட்கிறார்கள்.

மனித உயிரைத் தொடர்ந்து பல தலைமுறைகளுக்கும் வரக்கூடிய சொத்து வினைப்பதிவுகள் மாத்திரமே தான்.

இது வரையில் பல பிறவித் தொடராகச் சேர்ந்தும், இப்பிறவியிலும் கூட்டப்பட்டதும் ஆகிய நமது வினைப்பதிவுகள் அனைத்தும் உடலில் நோயாகவும், மனதில் களங்கங்களாகவும் உள்ளன.

எனவே, எழும் எண்ணங்கள் அனைத்தும் நாம் சேர்த்துவைத்த நமது சொத்துக்களே. அவை எங்கு போகும்?

நாம் வேறு வகையில் மனதை, உடலை, வாழ்வில் பழக்கி, புதிய பதிவுகளை ஏற்படுத்தி பழைய பதிவுகளின் வேகத்தைக் குறைக்க வேண்டும்.

தவம் செய்து உயிரின் அசைவையே கவனிப்பது ஒரு புதிய திருப்பம், சிறிது காலம் பயின்ற பின் தான் மனம் நாம் விரும்பும்வாறு ஒரே எண்ணத்தில் நிலைபெறும்.

அதுவரையில் விடா முயற்சியோடு பழகி பழைய பதிவுகளுக்கு மேல் பதிவுகளைக் கொடுக்க வேண்டும்.

## பேரின்பமும் அறிவின் உயர்வும்:

“சூடளக்கும் கருவியிலே ரசத்தைப் போல,
  சோதிவிந்து சூடேறி நெற்றி முட்ட,
நாடளக்கும் அறிவிற்கோர் புதுமை தோன்றும்;
  நாடிநிற்கும் தன் மூலஸ்தானம் பட்ட
பாடளக்கும், பயனடைந்த பக்குவத்தால்,
  பண்டைநிலை உற்றுணர்ந்து பேரானந்த
வீடளந்து, முடிவுகண்ட அனுபவத்தால்
  விருப்புவெறுப்புணர்ந்த பெருவாழ்வாய் நிற்கும்.” (ஞாக.பா.1467)

நாம் சமையலறையில் அலமாரியில் சமையளுக்கேற்ற ஐம்பது பொருட்களை அடுக்கி வைத்திருக்கிறோம் என்று உதாரணத்துக்காக வைத்துக் கொள்ளுங்கள்.

மிளகு வேண்டுமென்று எடுக்கப் பார்க்கிறோம். அந்த வேலையில் கடுகு, பூண்டு, சீரகம் இன்னும் மற்ற சாமான்களும் கண்களுக்குத் தென்படுகின்றன. நான் மிளகு தானே தேடுகிறேன்.

இவையெல்லாம் ஏன் தென்பட வேண்டும் என்று சலித்துக் கொள்ள முடியுமா? எல்லாமே நாம் வைத்தவைதாம்.

தேவையான போது அவையும் உதவும். இப்போது மிளகை மாத்திரம் தேடி எடுத்துக் கொள்வோம் என்று மிளகை எடுத்துக் கொள்வது தான் சரியான வழி.

இதே போன்றே நமது சொத்துக்களாம் வினைப்பதிவுகள் அனைத்தும் எண்ண அலைகளாக எழுச்சி பெற்றுக் கொண்டே தான் இருக்கும்.

வேண்டும் போது அவையும் பயன்படும். இப்போது குண்டலினி சக்தியின் மீது மனம் வைத்து தவம் செய்வோம் என்று விழிப்பு நிலைக்கு மனத்தைக் கொண்டுவந்து தவத்தை தொடர்ந்து ஆற்றவேண்டியது தான்.

# 3. ஊனுடம்பும் அமிர்தசொரூபமே.

கட்டடத்துக்கு நல்ல அஸ்திவாரம் போல், கப்பலுக்கு கலங்கரை விளக்கம் போல், வண்டிக்கு அச்சாணி போல், மனிதனுக்கு நிம்மதியும், மகிழ்ச்சியும் நிலவ பெரிதும் உதவுவது உடல் நலமே.

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்பது அவ்வையின் அமுதமொழி.

- சமையல் சரியில்லைன்னா ஒரு நாள் துன்பம்,
- அறுவடை சரியில்லைன்னா நான்கு மாத துன்பம்,
- படிப்பு சரியில்லைன்னா ஒரு வருட துன்பம்.

ஆனால் உடம்பு சரியில்லைன்னா ஆயுள் முழுவதும் துன்பம்.

ஒவ்வொருவருக்கும் இறைவன் கொடுத்த இனிய வாழ்க்கையில், உடல் என்பது ஒரு அதிசயம்.

"காயமே இது பொய்யடா, வெறும் காற்றடைத்த பையடா" என்று சித்தர்கள், அன்றைக்கு உடம்பைப்பற்றி சொல்லி வைத்தார்கள்.

பின்னால் வந்த மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை, "காயமே இது மெய்யடா, இதில் கண்ணும் கருத்தும் வையடா, நோயில்லாமல் காத்து

நூறாண்டுகள் உய்யடா" என உடம்பின் மேன்மையை, அக்கறையோடு விளக்கினார்.

திருமூலரும் தனது திருமந்திரத்திலேயே,

"உடம்பினை முன்னும் இழுக்கென்று இருந்தேன்
உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்பிலே உத்தமன் கோயில் கொண்டானென்று
உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே!"

என உடம்பின் முக்கியத்துவத்தை பாடல் மூலம் விளக்குகிறார்.

உடலும் ஆரோக்கியமும்

இன்றைய சூழலில் எல்லா பொருளும் வீடு தேடி வரும் காலம். நாம் நினைத்தால் எந்தப் பொருளையும் விலைக்கு வாங்கலாம். அதற்கு பணம் மட்டும் தேவை.

ஆனால் வாங்க முடியாத பொருள் உண்டென்றால் அது ஆரோக்கியம் மட்டும் தான். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது பழமொழி.

மொய்ப்பால் நரம்பு கயிறாக
  மூளை என்பு தோல் போர்த்த
குப்பாயம் புக்கு  இருக்க கில்லேன்
  கூவிக்கொள்ளாய் கோவேயோ
எப்பா லவர்க்கும் அப்பா
  லாம் என் ஆர் அமுதேயோ
அப்பா காண ஆசைப்
  பட்டேன் கண்டாய் அம்மானே." (திருவாக.பா.419)

அழியும் தன்மை உடைய உடல் வாழ்க்கை எனக்கு வேண்டாம். பிரபஞ்சத்துக்கு அப்பால் இருக்கிற அமிர்த சொரூபமே நான் வேண்டுவது.

நெருங்கி காணப்படும் பால் போன்ற வெள்ளை நிற நரம்புகளாகிய கயிறு கொண்டு, மூளை? எலும்பு முதலியவற்றைக் கட்டி, தோலால் போர்த்தப்பட்ட சட்டைக்குள் புகுந்து கொண்டு. என்னால் இருக்க முடியவில்லை.  என்னைக் கூவி அழைத்துக் கொள்வாயாக!

"சிறியது உடல் பெரியது மெய்" என்கிறது வேதாத்திரியம்.

"பெற்ற உடம் பின்பயனாய், ஊறுமுதல் ஐந்து
  புலன்மூலம் அனுபவித்தல் சிற்றின்ப மாகும்.
நற்றவத்தால் உயிரறிந்து, அறிவிறிந்த போது

நாம்பிறவி எடுத்தபயன் பேரின்ப மாகும்.
சிற்றின்பம் இன்றிப்பே ரின்பமென்ப தில்லை.
சிறியது உடல், பெரியதுமெய், சீவன்சிவன் உண்மை.
பற்றின்றி வாழ்வில்லை. அளவுமுறை கண்டால்
பற்றற்ற வாழ்வாகும். பகுத்துணர்வோம் நாமே.” (ஞாக.பா.314)

இயக்க நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் பொருளையும், இடமாகவும் விளைவாகவும் இருப்பது பரம்பொருள் ஒன்றே.

ஆதிநிலையில் பரமாகவும் அணுநிலையில் உயிராகவும் அணுக்கள் இணைந்த கொத்து நிகழ்ச்சியில் உருவங்களாகவும், காட்சிகளாகவும் இயங்கிக் கொண்டுள்ளது.

உடலில் இயங்கும் உயிரின் சுழற்சியால் ஏற்படும் தள்ளல் கொள்ளல் சக்தியாகிய ஜீவகாந்தம் அழுத்தம் முதல் மணம் வரை தன்மாற்றமடைந்து அந்தந்தப் புலன்கள் மூலம் செலவு செய்து செய்து அனுவிக்கும் நிலை சிற்றின்பம் எனப்படும்.

உலக வாழ்க்கையில் பெறும் இன்பமாகும். மன அலையைக் குறைத்து நிலைக்கு வரக்கூடிய அகநோக்குத் தவத்தின் மூலம், உடலுக்குள் உயிர், உயிர்க்குள் அறிவு, அந்த அறிவே தெய்வமாகவும் உள்ளது என உணரும் நிலை பேரின்பமாகும்.

ஐம்புலன்களையும் அறிவின் கட்டுக்குள் கொண்டுவரும் நிலையாகும்.

மனிதப் பிறவி எடுத்ததன் பயன் பேரின்ப நிலையாகும். அந்நிலை எய்துவதே மனிதப் பிறவியின் நோக்கமும் ஆகும்.

அந்நிலை மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் பெறவேண்டிய உரிமையுமாகும்.

உடல், உயிர், மனம் ஆகிய மூன்றிணைப்பில் தான் சிற்றின்பமும் பேரின்பமும் அமையப்பெறும்.

ஆகவே சிற்றின்பம் இன்றி பேரின்பமென்பது கிட்டாயாது. உடல் இறைநிலையின் ஒரு பகுதியாக இருப்பதால் சிறியது.

அனைத்து இயக்கங்களையும் இணைத்துக் கொண்டிருப்பதால் மெய் பெரியது.

உடல் என்பதை சிறிய மெய் என்கிறோம். உடலுள் இயங்கும் சீவனே அனைத்தையும் ஆண்டு கொண்டிருக்கக் கூடிய சிவனாகவும் உள்ளது என்பதை உணர வேண்டும்.

சிற்றின்பத்திற்கு உடல் பற்றும் பேரின்பத்திற்கு இறைப்பற்றும் அவசியமானது.

அப்பற்றுக்களில் அளவுமுறை பேணி வாழ்ந்தால் அதுவே பற்றற்ற நிலையாகும். காரண காரியங்களை மனதில் கொண்டு விஷயங்களைப் பிரித்து அறியும் பகுத்துணர்வாளர் நாமே.

## 4. உடல் எடுத்ததன் பெருநோக்கம் என்ன?

"ஈசுவரன் அனந்தன். ஸர்வ சக்திமான். அவன் அருள் மயமான தனது தெய்வீ சக்தியை மானிட சரீரத்தில் தோற்றுவித்து, நம்மிடையே ஓர் அவதார புருஷனாகத் தோனறத் திருவுளங் கொள்ளலாம்.

ஈசுவர அவதாரத்தினின்றும் அருள்வெள்ளம் பெருகிப் பக்தர்களை இன்புறுத்துகிறது. வார்த்தைகளால் இவ்விஷயத்தை விளக்க முடியாது.

ஞானக் கண்ணால்தான் இந்த உண்மையைப் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டும். இதை நம்ப வேண்டுமானல், ஈசுவரனை அனுபூதியில் காணவேண்டும்.

ஆயினும் உவமை மூலமாக இவ்விஷயத்தை ஒருவாறு தெரிந்து கொள்ளலாம்.

ஒருவன் ஒரு பசுவின் கொம்பு, கால், வால், மடி இவைகளில் ஒன்றைத் தொடுவதாக வைத்துக் கொள்வோம்

இப்படித் தொடுவது அந்தப் பசுவைத் தொடுவதாகாதா?

மானிடர்களான நமக்குப் பசுவினிடத்து முக்கியமானது அதன் மடியிலிருந்து வரும் பாலே. திவ்வியப் பிரேமையாகிற பாலானது நமக்கு ஈசுவராவதாரத்தினிடமிருந்து பெருகுகிறது." (ஸ்ரீ இராமகிருஷ்ணர் உபதேசம்.)

சீவர்ந்து ஈமொய்த் தழுக்கொடு
  திரயுஞ் சிறுகுடில் இது சிதையக்
கூவாய் கோவே கூத்தா
  காத்து ஆட் கொள்ளும் குருமணியே
தேவா தேவர்க்கு அரியானே
  சிவனே சிறிது என் முகம்நோக்கி
ஆவா என்ன ஆசைப்பட்டேன்
  கண்டாய் அம்மானே." (திருவாக.பா.420)

விந்து ஒழுகவும்,மொய்க்கவும், அழுக்கோட கூடிய இந்த சிறு கடில் (உடம்பு) அழியுமாறு, கூவி அழைப்பாயாக!

சிறிதே திரும்பி, என் முகத்தைப் பார்த்து இரங்குவாய் என ஆசைப்படுகிறேன்.

உடல் எடுத்ததன் பெருநோக்கம் என்ன? வேதாத்திரியம் விடை தருகிறது

"உடலெடுத்து உயிர்வாழும் ஒவ்வொரு மனிதருக்கும்,
உலகினிலே வாழ்வதற்கும், புலனின்பம் பெறுவதற்கும்,
உடல்உயிர், அறிவுபரம் உணர்ந்துநிறை வெய்திடவும்,
ஒத்தபொருள், சூழ்நிலைகள், பிறர்உதவி இவைவேண்டும்.
உடலெடுத்த பெருநோக்கம், இயற்கைஉயிர் அறிவிம் மூன்றும்
ஒவ்வொருவரும் உணர்ந்தும், பிறர் உரிமைகாத்தும்,
உடல்உயிர், வாழ்க்கையறம் உலககெங்கும் தழைத்தோங்க
உலகிணைந்த பேரரசு உறுதிசெய்யும் நிலை வேண்டும்." (ஞாக.பா.242)

உடல் இயக்கம், உயிர் இயக்கம் இரண்டும் இணை் நத ஒரு சிறப்பு இயக்கம் ஜீவன் எனப்படும்.

உடலூடே உயிர் சுழன்று இயங்கும்போது அவ்வுயிரின் சிறப்பு ஆற்றலாக எழும் விளைவே உணர்ச்சிகள் ஆகும்.

உணர்ச்சிகளைத் துய்த்து உயிரானது வெறும் உண்மை நிலைத் தெளிவே அறிவு ஆகும்.

பரம் என்பது மெய்ப்பொருள், இருப்பு நிலையில் வெளி, சிவம், தெய்வம் என்று வழங்கப்பெறும் ஆதி நிலையாகும்.

அதுவே இயங்கும் நிலையில் அணு அல்லது சக்தி எனப்படும்.

பரத்தில் தோன்றிய பர அணுக்களின் கூட்டு இயக்கமே பிரபஞ்சமும், உயிரினங்களும், உலகில் வாழும் கோடான கோடி உயிரினங்கள். இந்த உயிரினங்களில் ஆறவாவது அறிவுடைய மனிதனே சிறந்தவன்
.
உடல் எடுத்து உயிர் வாழ்கின்ற ஒவ்வொரு மனிதரும் உலகில் வாழ்வதற்கும் புலன் இன்பம் பெறுவதற்கும், உடல், உயிர், அறிவு, பரம் ஆகிய நான்கியும் உணர்ந்து நிறைவாக வாழவும், அடிப்படையான வாழ்வியல் தேவைப்பொருட்கள் சூழ்நிலைகள் மற்றும் பிறருடைய உதவியும் அவசியமாயுள்ளது.

உடல் தோன்றியதன் நோக்கமே இயற்கை என்னும் தெய்வம், உயிர், அறிவு ஆகிய மூன்றையும் உணர்ந்து கொள்வதுதான்.

தனது உடலுக்குள் உயிர், உயிர்க்குள் அறிவு, அந்த அறிவே தெய்வமாகவம் உள்ளது என்ற உண்மைகளை மனிதன் உணரும்போது மற்ற மனிதர்களிடமும் அது இயக்கம் உள்ளது என்பதை உணர்வதால், பிறரது உரிமைகளைக் காத்து தனது உடல் உயிர் இயக்கங்களை ஒழுங்குபடுத்தி குற்றமற்ற வாழ்வு வாழமுடியும்.

இந்நியையில், மனித குலம் உலகெங்கும் தழைத்தோங்க வேண்டுமானல், உலகம் முழுவதும்  இணைந்த ஒரே ஆட்சி முறையான உலகப் பேரரசை உறுதிசெய்யும் நிலை மாறவேண்டும்.

ஓர் உலக ஆட்சியின் மூலம்தான் தனி மனிதனின் சுதந்திரம் காக்க முடியும்.

## 5. சரீரத்தோடிருப்பினும் அவன் முக்தனே.

"எம் தலைவனே! தந்தையே!  நிறைந்த எலும்பு தசைகளால் ஆகி, அழுக்கு சுரக்கும், பெருமை இல்லாத, நடக்கும் வீடாக விளங்கும், இந்த உடம்பு என்னைத் தொடர்வதால், நான் மிகவும் வருந்தித் துன்புறுகின்றேன்." என்று மாணிக்கவாசகர் இந்தப் பாடலில் பாடுகிறார்.

ஆனால் சரீத்தோடும் முக்தன் ஆகலாம் என்கிறார் ஶ்ரீ இராமகிருஷ்ணர்.

"ஒருவனுக்கு எவ்வளவு காலம் திவ்விய தேசஸ் உண்டாக வில்லையோ, எவ்வளவு காலம் பொற் குளிகையால் பித்தளை பொன்னாக மாறவில்லையோ அவ்வளவு காலம் வரையில் "நான்தான் கர்த்தா" என்ற மதிமயக்கம் இருக்கும்.

அதுவரையில் "இந்த நற்காரியத்தை நான் செய்தேன். அந்தக் கெட்ட காரியத்தை நான் செய்தேன்" என்ற வித்தியாச மனோபாவம் இரு  ந்து திருக்கும்.

இந்த வேறுபாடுற்ற மனோப  வந்தான் சம்ஸாரம் நீடித்திருப்பதற்குக் காரணமாகிய மாயை, நல்வழியில் செலுத்தவதும், ஸத்வகுணம் மேலோங்கி நிற்பதுமாகிய வித்யாமயையில் சரணம் புகுந்தாலோ ஒருவன் ஈசுவரனை அடைவான்.

ஈசுவரனை நேரில் கண்டு அவனுடைய ஸ்வரூபத்தை அறிபவன் தான் உண்மையான முக்தன்.

அவன் மாயையாகிய சமுத்திரத்தைத் தாண்டுபவன். ஈசுவரனே கர்த்தா, தான் கர்த்தா அல்லன் என்று உணர்பவன் சரீரத்தோடிருக்பினும் அவன் முக்தனே." (ஶ்ரீ இராமகிருஷ்ணர் உபதேசம்.)

மிடைந்து எலும்பு ஊத்தை மிக்கு
  அழுக்கு ஊறல் வீறிலி நடைக்கூடம்
தொடர்ந்து எனை நலியத் துயருறு
  கின்றேன் சோத்தம் எம்பெருமானே
உடைந்து நைந்து உருகி உன்
  ஒளி நோக்கி உன்திரு மலர்ப்பாதம்
அடைந்து நின்றிடுவான் ஆசைப்
  பட்டேன் கண்டாய் அம்மானே.” (திருவாக.பா.421)

- எம் தலைவனே!
- தந்தையே!

நிறைந்த எலும்பு தசைகளால் ஆகி, அழுக்கு சரக்கும், பெருமை இல்லாத, நடக்கும் வீடாக விளங்கும், இந்த உடம்பு என்னைத் தொடர்வதால், நான் மிகவும் வருந்தித் துன்புறுகின்றேன்.

சிறியோனாகிய நான் பெரியோனாகிய உன்னை வணங்குகின்றேன். உள்ளம் உடைந்து, சிதறி, உருகி, உன் திருவருள் ஒளியை எதிர் நோக்கி இருந்தேன்.

உனது மலர் போன்ற திருவடிகளை அடைந்துவிடலாம் என்று ஆசைப்படுகின்றேன்.- என்கிறார் மாணிக்கவாசகர்.

இறைவன் திருவடிகளை அடைய என்ன செய்ய வேண்டும்? ஒன்றி ஒன்றி நின்று அறிவைப் பழக வேண்டும் என்கிறது வேதாத்திரியம்.

“ஒன்றி ஒன்றி நின்று அறிவைப் பழக்க
  உறுதி, நுட்பம், சக்தி இவை யதிகமாகும்
அன்று அன்று அடையும் அனுபவங்கள் எல்லாம்
  அறிவினிலே நிலைத்து விடும். ஆழ்ந்து ஆய்ந்து
நன்று என்று கண்டபடி செயல்கள் ஆற்றும்
  நற்பண்பு புலன்களுக்கு அமைந்து போகும்
என்றென்றும் கருவிடத்தே அறிவை ஒன்றும்
  இயற்கைமுறை சிறப்புடைத்து ஈதே தவமாம்.” (ஞாக.பா.1473)

மனம் என்ற அனுபோக அனுபவங்களுடன் கூடிய ஜீவகாந்த அலையானது சுழன்று கொண்டேயிருப்பதால் மூளை செல்கள் மூலம் பிரதிபலிப்பாகி எண்ணங்கள் வந்து கொண்டேயிருக்கும்.

அந்த எண்ணங்கள், சொல்லாக, செயலாக, விளைவாக மலர்ந்து கொண்டேதானிருக்கும்.

மனதை ஒருமுகப்படுத்துவதற்கு இரு புருவ மையமாகிய ஆக்கினையில் நிறுத்தி, நிறுத்திப் பழகப் பழக உயிர்ச்சுழல்

வேகமானது குறைந்து கொண்டே. நிலைக்கு வந்து அறிவு என்ற இருப்பில் ஒன்றிவிடும்.

இவ்வாறு பழக்கும்போது, அறிவுக் கூர்மையினால், மனதிற்கு உறுதி, நுட்பம், சக்தி ஆகியவை அதிகமாகும்.

ஒவ்வொரு நாளும் அனுபவிக்கும் அனுபவங்கள் எல்லாம் அறிவில் நிலைத்துத் தரமாகி விடும்.

அதனால் நல்ல செயல்களையே தேர்ந்தாற்றும் நல்ல பண்பு இயல்பாகவே புலன்களுக்கு அமைந்துவிடும். செயல்களில் சீர்மை ஏற்படும்.

எந்தக் காலத்தில் வாழ்கின்ற மக்களும். மனதை அமைதிப்படுத்தி நிறைவாக வாழ்வதற்கு, மனதிற்கு மூலமான உயிரில் ஒடுக்கி, உயிருக்கு மூலமான அறிவில் அடக்குவதற்கான சிறப்பை உடைய வழிமுறை இதுவே ஆகும்.

இதுவே இயற்கைக்கு ஒத்தான தவமும் ஆகும்.

தவத்துடன் கூடிய தற்சோதனையுடன், சங்கல்பமும், இணைந்து பயணிக்கும் போது இறைவனின் திருவடிகளை அடையும் நிலை தானாகவே வந்துவிடும்

## 6. அன்பும் கருணையும் உடையது இறைநிலை

“வெளிப்பார்வைக்கு கேவலமாக உள்ளதும், ஆனால் உட்புறத்திலே அன்பு நிறைந்ததுமான ஒரு குடிசைதான் ஆண்டவன் குடியேறி வசிப்பதற்கு ஏற்றதொரு மாளிகை.” (இங்கர்சால்)

“அளிபுண் அகத்துப் புறந்தோல்
  மூடி அடியேனுடையாக்கை
புளியம்பழம் ஒத் இருந்தேன்
  இருந்தும்விடையாய் பொடியாடி
எளிவந்தென்னை ஆண்டு
  கொண்ட என்னார் அமுதேயோ
அளியேன் என்ன ஆசைப்
  பட்டேன் கண்டாய் அம்மானே.” (திருவாக.பா.422)

- விடைமேல் வருபவனே!
- சாம்பலைப் பூசி இருப்பவனே!
- என் அமுதமே!
- தந்தையே!

புண்ணை உள்ளே வைத்து. வெளியில் தோல் மூடப்பட்ட என்னுடைய உடம்போடு நான், புளியம்பழமும் ஓடும் போல ஒட்டாது இருந்தேன்.

அப்படி இருந்த என்னை எளிதில் வந்து ஆட்கொண்டாய் "இரங்கத் தக்கவன்" என்று நினைக்க மாட்டாயோ, என ஆசைப்படுகிறேன் என்கிறார் மாணிக்கவாசகர்.

அன்பும் கருணையும் உடையது இறைநிலை என்பது வேதாத்திரியம்.

இயற்கையை ஆராய்ந்து பார்த்தால் அன்பும் கருணையும் தான் எங்கும் எதிலும் அமைந்திருக்கக் காணலாம்.

அன்பு என்பது எந்த ஒன்றையும் உடலாலோ, மனத்தாலோ தன்னோடு இணைத்துப் பிடித்துக் கொண்டிருப்பது.

அப்படி இணைந்துள்ள மற்றொன்றுக்குத் தனது ஆற்றலைத் தொடர்ந்து அளித்து அதனைக் காத்து வருவது கருணை.
.
ஒரு முட்டையைப் பாருங்கள். அதிலுள்ள அணைத்துப் பொருட்களையும் ஒன்றிணைத்து அதன் ஓடு பிடித்துக் கொண்டிருக்கிறது. இது போன்றது அன்பு.

முட்டைக்குள்ளிருக்கும் மஞ்சட் கருதான் குஞ்சு ஆக உருவாக இருக்கிறது.

அந்த மஞ்சட் கருவுக்கு அதனைச் சுற்றியுள்ள வெள்ளைக்கரு தேவையான எல்லாப் பொருட்களையும் அளித்து நலமளிக்கின்றது. இது போன்றது கருணை.

ஒரு மாமரத்தில் பிஞ்சுவிடுகிறது. அதனைச் சிறு காம்பின் மூலம் விழுந்துவிடாமல் மரமானது பிடித்துக் கொண்டிருக்கிறது. இது அன்பு.

அவ்வாறு பிடித்துக் கொண்டே பிஞ்சு வளர்வதற்குத் தேவையான ரசாயன நீரை அந்த மரம் பாய்ச்சிக் கொண்டே இருக்கிறது. அது தான் கருணை.
.
உயிரினங்களில் ஒரு குழந்தையைப் பெற்ற தாய் அதனை எப்போதும் தன்னோடு இணைத்துப் பிடித்துக்கொண்டோ அல்லது அது பிரிந்து போய் விடாமல் கண்காணித்துக் கொண்டோ இருக்கிறாள் இது அன்பு.

அதே காலத்தில் அந்தக் குழந்தை வளர்வதற்கும் வாழ்வதற்கும் தேவையான பால், உணவு இவைகளை அது வளர்ச்சி பெறும் வரையில் ஊட்டிக் கொண்டே இருக்கிறாள். இதுதான் கருணை.

"அன்பிரக்கம் தொண்டு தவம் ஈகை இன்சொல்

ஆன்மிக நெறியாகும் போற்றிக்காக்க
துன்பங்கள் குறைந்துவரும்; மேலும் தெய்வத்
துணைகிட்டும்; வாழ்வில் புகழ் நிறைவு ஓங்கும்;
நன்முறையில் தனிமனிதன் வாழக்கற்றால்
நாட்டினிலும் வீட்டினிலும் அமைதி ஓங்கும்;
இன்பமயமே எங்கும், இந்த உண்மை
எளிதன்றோ கற்பதற்கும் வாழ்வதற்கும்". (ஞாக.பா.1596)

"ஆறுகுணச்சீரமைப்பு பெற்று மனத்தூய்மை
பெறும் போது நம்மிடம் உள்ள அன்பும்
கருணையும் பீறிட்டு மேலோங்குகின்றன."
.
"அன்பையும் கருணையையும் கொண்ட மனிதன்
அதை உணர்ந்து தன் வாழ்விலும் செயலிலும்
பின்பற்றி வாழ்வதே இறைவழிபாடாகும்."

## 7. இவ்வாழ்க்கை ஏன் வைத்தாய்?

"இறைவனிடம் பக்தி செலுத் ததுகிறவர்கள், அந்தப் பக்தியைக் குறித்து அகம்பாவம் அடையாமல், அது ஆண்டவனுடைய அருள் என்றே தெரிந்து, அடக்கத்துடன் பக்தி செலுத்த வேண்டும்.

நாம் செலுத்தும் பக்தி நாம் கடவுளுக்கு கொடுக்கும் ஒரு பொருளில்லை. அவன் நமக்குத் தந்த பொருள் அது. அவன் அருள் இருந்தால் பக்தி தானாகவே தோன்றும்" (திருமூலர்)

"எய்த்தேன் நாயேன் இனி இங்கு
இருக்ககில்லேன் இவ்வாழ்க்கை
வைத்தாய் வாங்காய் வானோர்
அறியா மலர்ச்சே வடியானே
முத்தா உன்தன் முகஒளி
நோக்கி முறுவல் நகைகாண
அத்தா சால ஆசைப்
பட்டேன் கண்டாய் அம்மானே" (திருவாக.பா.423)

- வான உலத்தவரும்அறியாத மலர் போன்ற சிவந்த திருவடிகளை உடையவனே!
- தந்தையே!
- இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்கி இருப்பவனே!

நாயேனாகிய நான் மிகவும் களைத்துப் போய்விட்டேன். இனி இங்கு இருக்க என்னால முடியாது.

இல்வாழ்க்கையைத் தந்தாய். இப்பொழுது அதை எடுத்துக் கொள்வாயாக!

நினது பேரொளி உடைய முகத்தின் புன்முறுவலைக் காண்பதற்கு மிகுதியும் ஆசைப்படுகிறேன் என்கிறார் மாணிக்கவாசகர்.

இல்லறமே பண்பாட்டு முறை" என்கிறது வேதாத்திரியம். இல்லறத்தில் இருந்து இறையுணர்வு பெறலாம்.

"மனிதரின் வாழ்க்கையிலே அறிவு கொள்ளும்
  மாற்று நிலைகள் எண்ணிறந்த வற்றில்
தனின்தனியே பிறதொடர்பால் பலவாய் மாறும்
  தன்மை அறிந்தேன். ஒழுக்கச் சிகரமான
புனிதமுள தாம்பத்ய உறவில் மட்டும்
  பொங்கிஎழும் மாற்றங்கள் அனைத்தும் கண்டேன்.
இனி அதனால் இல்வாழ்வே அறிவின் பூரண
  இயல்பறியும் வாய்புளதாய் எவர்க்கும் சொல்வேன்" (ஞாக.பா.563)

மனித அறிவிற்கு, ஏரேனும் ஒரு பொருள், நிகழ்ச்சி, போன்றவை சரியானது என்று அறியும்.

ஆனால் விநாடிப் பொழுதிற்குள்ளாகவே சரியல்ல என்று அறிவிற்குப் புலப்படும்.

இவ்வாறு மனித வாழ்வில் அறிவு கொள்ளும் அனுபவங்களும் மாற்று நிலைகளும் கணக்கில் அடங்காதவையாகும்.

தனித்னியாக இருக்கும் அறிவின் நிலைகள், பிறவற்றின் தொடர்பின் காரணத்தால் பலவாறாகவும் மாறக்கூடியது.

இந்த உண்மைகளை எல்லாம் அறிவை அறியும் முயற்சியிலே உணர்ந்து கொண்டேன்.

ஒழுக்கத்திலேயே சிறப்புடையது தாம்பத்ய உறவு ஆகும். தம்பியருக்கிடையில் மட்டும் உள்ள உறவு, தாம்பத்தியமாகக் கொள்ளும் உறவு. அதனால் தூய்மையானது.

தாம்பத்திய உறவில் மட்டுமே அறிவு விரைவாகி பொங்கி எழும் மாற்றங்கள் அனைத்தையும் கண்டுவிட்டேன்.

ஆகவே இல்வாழ்வின் மூலம் அறிவின் முழுமையான இயல்பை அறியக்கூடிய வாய்ப்பு உள்ளதாக இனிமேல் எவருக்குமே சொல்லுவேன்.

இல்லறமே அறிவை முழுமையாக அறிந்து இனிமையாக வாழ்வதற்கான அனுபவங்களை பண்பாடுகளை உள்ளடக்கிய அமைப்பு ஆகும்.

“மெய்யுணர்வு பெற்று, மேலாம் பத அடைந்து,
ஐயுணர்வைச் சீரமைத்து அறம்கண்ட அருட் செல்வா!
செய்யவுள்ள கடமை என்ன? சி ற் பாப் இல்லறம் ஆற்று!
உய்யநினைப் போரெல்லாம் உன்வழியைப் பின்பற்ற.” (ஞாக.பா.564)

மெய்யுணர்வு என்றால் உண்மை உணர்வு. அதுவே இறையுணர்வு ஆகும்.

தனக்குள்ளாக எல்லாவற்றையும். எல்லாவற்றிற்குள்ளும் தன்னையம் காணும் தகைமை பெற்றவன் மெய் உணர்வாளன் ஆவான்.

இறைநிலை ஆகிய உண் மை் பொருளே, ஒரு பகுதியாகத், தானாக உணரும்போது எல்லாவற்றிலும் அதே நிலையை உணரமுடியும்.

அவ்வாறு உயர்வான பேறு பெற்றவர்கள், ஐந்து புலன் உணர்வுகளையும் அறிவின் கட்டுக்குள் வைத்து, அகம் மற்றும் புற வாழ்க்கை சீராக இயங்கிட வழிவகுத்த அருட்செல்வர் ஆவார்.

அருளையே அன்பையே, அமைதியையே செல்வமாகப் பெற்றவர்கள். அதனால் அருட்செல்வர்கள்.

அப்படிப்பட்ட அருட்செல்வர்களின் கடமை என்னவென்றால், சிறபாக வாழ நினைப்பவர்கள் எல்லாம் அவரது வாழ்வியல் வழிமுறைகளைப் பின்பற்றும்படியாக இல்லறத்தை நல் அறமாக ஆற்றுவதே ஆகும்.

# 8. தெவிட்டாத அமுதமே!

மாணிக்கவாசகர் பெற்ற இறை அனுபவம் ஆகிய ஆனந்தம் மூன்று நிலைகளாகப் பிரித்துப் பேசப்பெறுகின்றது.

முதல் நிலை 'வாக்கு இறந்த அமுதம் மயிர்க்கால்தோறும் தேக்கிடச் செய்தனன் (திருவாச 3-170-17) என்பதாகும்.

தாம் பெற்ற அனுபவத்தை அமுதம் என்று அடிகளார் கூறுகின்றார். சிறந்த ஒன்றை அமுதம் என்று சொல்வது இந்நாட்டு இலக்கிய மரபாகும்.

இங்கு அனுபவத்தை அமுது என்றது மரபுபற்றி அன்று. தேவர்கள் உண்ட அமுதத்தைப் பெயரளவில் நாம் அறிவோமே தவிர அதன் இயல்பு முதலியவற்றை அவர்கள் மட்டுமே அறிவர்.

அதேபோல, மாணிக்கவாசகர் பெற்ற இறை அனுபவம் ஆகிய அமுதத்தை இறை அனுபவம் என்ற பெயரளவில் நாம் அறிவோமே தவிர, அதன் இயல்பு முதலியவற்றை அனுபவித்த மாணிக்கவாசகர் ஒருவரே அறிவார்.

தேவர்கள் உண்ட அமுதத்தைப்பற்றியும், அது கிடைத்த வரலாறு, தேவர்கள் உண்ட வரலாறு என்பவைபற்றியும், புராணங்கள் இன் றளவும் பேசுகின்றன.

ஆனால், மாணிக்கவாசகர் பெற்ற அனுபவத்தைச் சொற்களால் கூறமுடியாது என்பதை வாக்கிறந்த அமுதம் என்றார்.

அமுதமே ஆயினும் உண்டுவிட்டால் பின்னர் அது வெளியேறுவது உறுதி. ஆனால், அடிகளார் உண்ட இறையனுபவம் ஆகிய அமுதம் 'மயிர்க்கால்தொறும் தேங்கி நின்றுவிட்டது என்கிறார்.

உண்ட ஒன்று வயிற்றளவில் நின்று சீரணிக்கப்பட்டு குருதியோடு கலக்கும். அது எங்கும் தேங்கிவிடுவது இல்லை.

மாணிக்கவாசகர் பெற்ற அமுதம் உடல் முழுவதும் நிறைந்து மயிர்க்கால்தொறும் தேங்கிநின்றது என்று அவரே. கூறுகின்றார்.

அப்படியானால் இதன் பொருள் என்ன? உச்சந்தலையில் இருந்து உள்ளங்கால்வரை மயிர்க்கால் இறை அமுதம் பரவியிருக்கிறது என்பதாகும்.

“பாரோர் விண்ணோர் பரவி
  ஏத்தும் பரனே பரஞ்சோதி
வாராய் வாரா உலகம்
  தந்து வந்து ஆட் கொள்வோனே
பேரா யிரமும் பரவித்
  திரிந்து எம் பெருமான் என ஏத்த
ஆரா அமுதே ஆசைப்
  பட்டேன் கண்டாய் அம்மானே.” (திருவாக.பா.424)

- மண் உலகத்தவரும் விண் உலகத்தவரும் வாழ்த்தி வணங்கும் மேலானவனே!
- மேலான ஒளிப் பிழம்பே!
- மீண்டு வராத வீட்டு உலகைத் தந்து ஆட்கொள்பவனே!
- தெவிட்டாத அமுதமே!

- எம் தந்தையே!

வந்து அருளுவாயாக!

நினது ஆயிரம் திருப்பெயர்களைச் சொல்லி, வணங்கித் திரிந்து, “எம்பெருமான்” என வாழ்த்துவதற்கு ஆசைப்படுகிறேன்.

உடல் என்றாலும் உயிர் என்றாலும் மறை என்றாலும் சுத்த வெளியின் வெவ்வேறு வெளிப்பாடுகளே.

சுத்தவெளி என்ற தெய்வத்திற்கு ஆயிரம் பெயர்கள். “இங்குள்ள அனைத்தும் சத்தவெளியினால் செய்யப்பட்டதுதான்” சுத்தவெளியே எனது உபாதான காரணமும் (Material Cause) நிமித்த காரணமும் (Efficient Cause) ஆகும்.

சுத்த வெளியின் அம்சமே நான் என உணர்ந்த நிலையில்,. அனைத்தும் அந்த வெளியேயாதலால், அனைத்தும் நானே என்று அறிவது ஆத்மஞானம்.

அறிந்து அனைத்து ஜீவன்களோடும் ஒத்தும் உதவியும் வாழ்வது ஆத்மநேயம்.

சிந்தைக்கு வேண்டியது ஆத்மநேயம். ஆத்ம ஞானமும் ஆத்ம நேயமும் இணைந்தது வேதாத்திரியம்.

“இறைவா உன் இருப்புநிலை முற்றறிவாய் வெளியாய்
இயக்கநிலை சுழலையாம் விண்ணெனவும் காட்டி
மறைபொருளாம் இருப்போடு இயக்க அலை கூட
இவ்விரண்டும் இணைந்த நிலை வான்காந்தமென்று
நிறைந்து உள்ள காந்தமதே விண் கூட்டுக்கேற்ப
நேரழுத்தம் ஒலி, ஒளி, சுவை மணமும் மனமாய்
புறநிலையில் அகநிலையில் உனையறிவாய்க் காட்டி
போதனை செய் உலகுக்கிவ் வுண்மை என்னுள் ஏற்றேன்” (ஞாக.பா.1666)

இறைவா! உனது இருப்புநிலை தூயவெளி என்று உணர்ந்து கொண்டேன்.

உன்னிலிருந்து நுண் துகளாக எழுந்த விண்துகளையும் அதன் சுழலால் ஏற்படும் விரிவயையும் அந்த விரிவலையே காந்தமென்ற சிறப்படைந்து, அழுத்தமாக, ஒலியாக, ஒளியாக, சுவையாக, மணமாக பஞ்சபூதங்களில் தன்மாற்றம் பெறுவதையும் உயிரினங்களில் அதே தன்மாற்றம் மனமாக இயங்குவதையும் உணர்ந்து கொண்டேன்.

உனது காந்த ஆற்றல் சிறப்பால் செயலுக்கேற்ற விளைவு உண்டாகிறது.

ஒவ்வொருவருக்கும் இந்த நீதியை உணர்த்திவிட்டாய். இந்த உண்மைகளை அறியாமல் தவறு செய்து துன்பம் அனுவபவித்துத் தத்தளித்துக் கொண்டிருக்கும் மனித குலத்திற்கு உன்னை உணர்த்தி. உனது நீதியை உணர்த்தி, அறவழி வாழச் செய்யும் அகத்தவத் தொண்டினை என் கடமையாக ஏற்றுக் கொண்டு அறவழி வாழ்கின்றேன்.

## 9. மனம் உருக அகத்தவம் செய்வீர்

பிரார்த்தனையை எவ்வாறு செய்ய வேண்டும்? யாருக்காகச் செய்ய வேண்டும்? அதற்கான பத்து அம்சங்கள்.

நாள்தோறும் சில நிமிடங்களைப் பிரார்த்தனைக்காக ஒதுக்கி வையுங்கள். அப்போது மனதில் எந்த சலனமும் இல்லாது கடவுளைப் பற்றி மட்டும் நினைத்துப் பழகுங்கள்.

இயல்பாக சாதாரண வார்த்தைகளில் உங்கள் மனதில் உள்ளதைக் கடவுளிடம் சொல்லுங்கள்.

பேருந்தில் பயணம் செய்யும் பொழுதும், அலுவலகங்களில் வேலை செய்து கொண்டிருக்கும் பொழுதும் கடவுள் உங்கள் எதிரே இருப்பதாக நினைத்து 'குட்டி' பிரார்த்தனை அடிக்கடி செய்யுங்கள்.

எப்போதும் அது வேண்டும், இது வேண்டும் என்று கேட்டுக் கொண்டே இருக்காதீர்கள். கடவுள் ஏற்கெனவே கொடுத்ததற்கு நன்றி செலுத்துங்கள்.

உங்கள் பிரார்த்தனைகள் உங்களுக்குப் பிரியமானவர்களுக்கு கடவுளின் அன் மை யும், பாதுகாப்பையும் தரும் என்று நம்புங்கள்.

பிரார்த்தனையின் போது கசப்புணர்வும், பகைமை உணர்ச்சியும் மனதில் தலைதூக்க இடம் கொடுக்காதீர்கள்.

கடவுளிடம் கேட்க வேண்டியதைக் கேளுங்கள். ஆனால் அவர் கொடுப்பதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருங்கள். நீங்கள் கேட்டவைகளை விட அவர் கொடுப்பது சிறந்ததாகவே இருக்கும்.

ஆண்டவன் மீது பாரத்தைப் போட்டுவிட்டு இயன்றதைச் செய்யுங்கள். பலன் தருவதும் தராததும் அவர் விருப்பம்.

உங்களைப் பிடிக்காதவர்களும், உங்களைச் சரியாக நடத்தாதவர்களும், நலம் பல பெற்று வாழப் பிரார்த்தனை செய்யுங்கள்.

“கையால் தொழுது உன் சுழற்சேவடிகள்
கழுமத் தழுவிக் கொண்டு
எய்யாது என்தன் தலைமேல்வைத்து
எம்பெருமான் பெருமான் என்று
ஐயா என்தன் வாயால்
அரற்றி அழல்சேர் மெழுகுஒப்ப
ஐயாற்று அரசே ஆசைப்
பட்டேன் கண்டாய் அம்மானே.” (திருவாக.பா.425)

- திருவையாற்றுக்கு அரசனே!

உன்னை என் கைகளால் வணங்கி, உனது வீரக் கழல் அணிந்த திருவடிகளை மிகுதியும் தழுவிக் கொண்டு, சலிப்பின்ற என்னுடைய கைகளை பலமுறை தலைக்கு மேல் கூப்பி. “எம் தந்தையே, தந்தையே!” என்றும்,

“தலைவா!” என்றும். எம் வாயால் புலம்பி, நெருப்பில் இட்ட மெழுகு போல மனம் உருக ஆசைப்படுகிறேன் என்கிறார் மாணிக்கவாசகர்.

மனம் உருகி இறைவனிடம் சரணாகதி அடைய குண்டலினி யோகம் பயில வேண்டும்.

## குண்டலினி யோகம்

நாம் உணர்ந்து உலகிற்கு உணர்த்துவது எளியமுறைக் குண்டலினி யோகம் என்பதாகும்.

எளியமுறைக் குண்டலினி என்பது அறிவின் பதிவைக் கொண்ட உயிர்ச் சக்தியை மேலே நோக்கி எழச் செய்து அதிலே ஒன்றி நின்று இயற்கை இரகசியங்களை உணர்ந்து தன்னிலை உணரும் பயிற்சியாகும்.

உயரே சொல்லாமல், கீழ்நோக்கிப் போகா விட்டால் மேல்நிலை அனுபவ உணர்வு பெறுவது போய், தாழ்ந்த உணர்வுகளே தலையெடுத்து ஓங்கும் நிலை ஏற்படும்.

அதைத் தான் இன்று பெரும்பாலும் காண்கிறோம். அதனால் தான் சிக்கல்கள் ஏற்படுகின்றன.

மனிதனின் இந்தப் பழக்கத்தால் அவனின் உயிர்ச்சக்தி கீழ் நோக்கிய இடத்தில், அதாவது மூலாதாரத்தில் தேங்கிக் கிடக்கின்றது; குண்டலித்து உள்ளது.

இதனையே குண்டலினி சக்தி என்கிறோம். சக்தி என்ற உடன் அது உடல் எங்கும் நிலவுவதாயிற்றே என்ற எண்ணம் எழலாம். எங்கும் இயங்கும் சக்திக்கு ஒரு இயக்க மையம் வேண்டும் அல்லவா?

இந்த இயக்க மையமே மூலாதாரம் எனப்படும். எனவே, இயக்க மையத்தை முறையாக உசுப்பி விடும்போது மிகச் சிறப்பாகச் செயல்படுவது இயல்பு.

அதைத்தான் எளியமுறைக் குண்டலினியோகப் பயிற்சி என்கிறோம்.

இந்த உயிர்ச்சக்தி உடலின் மற்ற எல்லா இடத்திலும் பரவி இருப்பினும் அதற்கு ஒரு இயக்க மையம் உண்டு.

இரத்தம் உடல் முழுவதிலும் பரவி இருந்தாலும் இருதயத்தை இயக்க மையமாகக் கொண்டிருப்பதனைப் போல, காற்று உடல் முழுவதிலும் பரவி இருப்பினும் நுரையீரலை இயக்க மையமாகக் கொண்டிருப்பதனைப் போல, உயிர்ச் சக்திக்கும் இயக்க மையம் இருக்கத்தானே வேண்டும்.

உயிருக்கு இயக்க மையங்கள் பல உள்ளன. அத்தகைய மையங்கள் உடம்பில் ஆறு இடங்களில் இருப்பதாக மெய்யுணர்வாளர்கள் உணர்ந்து உணர்த்தி உள்ளனர்.

அவைகளின் அடி மட்டத்தில் இருக்கும் மையம் மூலாதாரமாகும். ஒவ்வொரு மையத்திலும், உயிர்ச்சக்தியை இயக்கிவிட்டால் அதற்கேற்ற பலன் ஏற்படும்.

மேலும் கீழே இருந்து மேலே போகப் போக, பலன்மிகும். இவ்வாறு இயக்கிவிடப்படும் உயிர்ச்சக்தியால் உடலில் உள்ள செல்களை ஒழுங்குபடுத்திச் செயல்படுத்த இயலும்.

உயிர்ச் சக்தியானது உடலின் செல்களுக்கு ஒத்த முறையில் அமையவில்லையென்றால் உடல் நோய்கள், மன நோய்கள் போன்றவை ஏற்படும்.

எனவே, ஆற்றல் மிக்க உயிர்ச்சக்தியைச் சேர்க்கவும், பாதுகாக்கவும் அறிந்திருக்க வேண்டும். இதனைத்தான் ஆன்மீக அறிவு என்கின்றனர்.

## உயர்ந்த அகத்தவம்

நிறைவடைந்த குருமூலம் நேர்முகமாய்க்
குண்டலினி யோகம் கற்று,
நித்த தவம் ஆழ்ந்தாற்றி உண்மை
உணரப்பெற்றால் முனைப்பு போகும்.

இறைவனது பகுதிநிலை உயிர்
மனமாய்த் தேர்ந்து அதன் உறைவிடமாம்
உடலதுவோ சமுதாயம் உற்பத்தி
செய்து பல பொருட்களீந்து

முறையாக வளர்த்துப் பண்பாட்டுடனே
கல்வி தொழில் காப்புதந்த
முழுக்கதையும் சிந்தனையின் முதிர்ச்சியினால்
உணர்ந்து வினைப் பதிவாய் பெற்ற

கறைநீங்க, உயிரதனை இறை நிலைக்கும்
கனஉடலைச் சமூகத்திற்கும்
கனிவுடனே அர்ப்பணிக்கும் தகைமை
வரும். இந்நிலையே முழுமைப்பேறாம்!" (ஞாக.பா.1497)

## அகத்தவத்தின் பெருமை

"அகத் தவத்தின் பொருள் கண்டு அதன் பெருமை உணர்ந்திடுவீர்!
அகத் தவமோ உயிரினிலே அறிவை ஒடுக்கும் பயிற்சி!
அகத் தவத்தால் மேலும் உயிர் அம்மாகி மெய்ப்பொருளாம்!
அகத் தவத்தால் வீடுணர்ந்து அமைதி பெற்று இன்புறலாம்

"அகத் தவத்தால் ஐம்பு அனை அடக்கி அறிவறிந் திடலாம்!
அகத் தவத்தால் அறு குணஆளுமைப் பேறடைந்திடலாம்!
அகத் தவத்தால் இல்லறத்தைஅன்பகமாய் ஆற்றிடலாம்!
அகத் தவத்தால் அனைத்துயிர்கள் அருநட்பைப் பெற்றிடலாம்!

அகத் தவம் தீவினை யகற்றும் அருள் நெறியை இயல்பாக்கும்!
அகத் தவமே இறைவழிபாடனைதிலும் ஓர் சிறந்த முறை!
அகத் தவமே உயிர் வழிபாடதனை விளக்கும் ஒளியாம்!
அகத் தவமே மதங்களெல்லாம் அடைய விரும்பும் முடிவு!" (ஞாக.பா.1496)

இந்தத் தெளிவையும் பயிற்சியையும் நல்குவதே எளிய முறைக் குண்டலினியோகம் என்பது.

உயிர்ச் சக்தியை உணர்ந்து அதன் இயக்கத்தை நெறிப்படுத்துவதன் மூலம், அதன் படர்க்கை நிலையான மனதையும் சீரமைத்துக் கொள்ள இயலும்.

# 10.மெய்ப்பொருள் இன்பம்

"ஒருவன் பூமியிலிருக்கையில் புல்லையும் வானுற ஓங்கி வளர்ந்த தேவதாரு மரத்தையும்கண்டு, "இந்த மரம் எவ்வளவு பெரிது, புல் எவ்வளவு சிறியது" என்கிறான்.

ஆனால் அவன் ஒரு மலை மீதேறி உச்சியிலிருந்து கீழே நோக்கும்போது, பெரிய தேவதாரு மரமும் சிறிய புல்லும் ஒருங்கே உருத்தெரியாத பச்சைப் படலமாகத் தோன்றுவதைக் காண்பான்.

அது போல உலகப் பற்றுள்ளவர்களுடைய பார்வைக்கு ஒருவன் அரசனென்றும், மற்றொருவன் தெரு பெருக்கும் தோட்டி என்றும், ஒருவன் தகப்பன் என்றும் மற்றொருவன் மகனென்றும் இம் மாதிரியான ஸ்தான பேதங்களும், அந்தஸ்து வித்தியாசங்களும் தோன்றும்.

ஆனால் தெய்வ தரிசனம் பெற்றபிறகு எல்லாம் ஒரே தோற்றம். அப்போது நல்லவர் கெட்டவர், உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற வித்தியாசங்களே இருப்பதில்லை." (ஸ்ரீஇராமகிருஷ்ணர் உபதேசம்.)

"செடியார் ஆக்கைத் திறம் அற
  வீசிச் சிவபுர நகர்புக்குக்
கடியார் சோதி கண்டு
  கொண்என் கண்ணினை களிகூரப்
படிதான் இல்லாப் பரம்பரனே
  உன் பழஅடியார் கூட்டம்
அடியேன் காண ஆசைப்
  பட்டேன் கண்டாய் அம்மானே. " (திருவாக.பா.426)

- தந்தையே!
- ஒப்புமை கூற முடியாத மேலான பொருள்களுக்கும் மேலானவனே!

குற்றம் நிரம்பிய இந்த உடம்பை வீசி எறிந்து விட்டு, காவல் அமைந்த சிவபுரம் என்று அடைக்கப்படும் உன்னுடைய நகருக்குள் நுழையவும். ஒளி உருவில் உன்னைப் பார்க்கவும். இரண்டு கண்களிலும் மகிழ்ச்சி ததும்பவும். உன்னுடைய பழைய அடியார் திருக்கூட்டத்தைக் காணவும். அடியேன் ஆசைப்படுகின்றேன்.

"தத்த தத்வனம் இத்யுபாஸிதவ்யம். ஸ ய ஏததேவம் வேதாபி ஹைனம் ஸர்வாணி பூதானி ஸம்வாஞ்சந்தி." (கேன உபநிடதம்)

ஆன்மா எல்லா உயிர்களிலும் நிறைந்திருக்கிறது. அவ்வாறே அறியப்படுகிறது.

எல்லா உயிகளிலும் நிறைந்ததாக அதனைத் தியானிக்க வேண்டும். ஆன்மா எல்லா உயிர்களிலும் நிறைந்திருப்பதை யார் அறிகிறானோ அவனை எல்லா உயிர்களும் நேசிக்கினறன.

பிரம்மமாகிய பேரறிவே நமது அறிவு என்று உயர் ஞான நிலையை வேதாத்திரியம் சொல்லும் போது...

“அவன் நீ ஒன்றா அறிந்த இடம்
அறிவு முழுமை அது முக்தி” (ஞாக.பா.2)

என்கிறது.

எல்லா உயிர்களும் ஒருவனை நேசிக்கின்ற அளவே அவனது முக்தி நிலை.

முக்தி என்பது மரணத்திற்குப் பின் அடையக்கூடிய நிலை அல்ல. மாறாக நாம் வாழ்கிற காலத்திலேயே வேண்டாததை வடிகட்டி, வேண்டியதற்கு படிகட்டி பிற உயிர்களை எத்துணையும் பேதமுறாது தம் உயிர் போல் எண்ணி, அனைத்து உயிர்கட்கும் அன்பு செய்கிற பக்குவத்தை நாம் அடைந்து விட்டால், நாம் அடைந்த நிலையே முக்தி.

முக்தி நிலையை முழுமையாக அடையாவிட்டாலும், அதை அடைவதற்கான பாதையிலாவது சற்று முன் செல்ல வேண்டும்.

அந்தப் பாதையில் நாம் மேலும் மேலும் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறோமா என்று அடிக்கடி தற்சோதனை செய்து கொள்ள வேண்டும்.

# 11. அஞ்சுவதேன் துணிந்துரைப்போம்!

ஒன்பது வாசல் கொண்ட தோல் பையான இந்த உடம்பின் மீது அளவு கடந்த அன்பு வைத்து மனம் போன போக்கில் அலைந்து திரிந்தாயே மனிதா!

எங்கிருந்தோ தத்தித் தத்தி நடந்து வந்து சட்டை போன்ற தங்கள் இறக்கைகளை பட பட வென அடித்து இறந்த உடல்களை தன் கூ றிய அலகால் குத்திக் கிழித்து தின்பதை தினமும் பார்க்கிறாயே! இந்த நிலையை பார்த்த பின்பும் உலக ஆசைகளில் மயங்கி . . .

ஒன்பது வாய் தோல் பைக்கு ஒரு நாளைப் போலவே
அன்பு வைத்து நெஞ்சே அலைந்தாயே - வன் கழுக்கள்
தத்தி தத்தி சட்டை தட்டி கட்டி பிட்டுக்
கத்திக் குத்தி தின்னக் கண்டு”

தவறுகளை செய்கிறாயே! என்கிறார் பட்டினத்தார்.

மாணிக்கவாசகரும் “நாயேனாகிய நான், சேல்மீன் போன்ற அழகிய கண்களை உடைய மகளிரது இனிமையாகக் கடிந்து கொள்ளும் வலையில் சிக்கிச் சிதைந்து போனேன்.” என்று வருந்துகிறார் இப்பாடலில்.

“வெஞ்சேல் அனைய கண்ணர்தம்
  வெகுளி வலையில் அகப்பட்டு
நைஞ்சேன் நாயேன் ஞானச்
  சுடரே நான்ஓர் துணைகாணேன்
பங்சேர் அடியான் பாகத்து
  ஒருவா பவளத் திருவாயால்
அஞ்சேல் என்ன ஆசைப்
  பட்டேன் கண்டாய் அம்மானே.” (திருவாக.பா.427)

பஞ்சு போன்ற மென்மையான திருவடிகளை உடைய உமை ஒரு பாகனே! தந்தையே!

நாயேனாகிய நான், சேல்மீன் போன்ற அழகிய கண்களை உடைய மகளிரது இனிமையாகக் கடிந்து கொள்ளும் வலையில் சிக்கிச் சிதைந்து போனேன்.

ஞானப் பேரொளியே! எனக்கு ஒரு துணையும் இல்லை. நின்னுடைய பவளம் போன்ற சிவந்த வாயால் “அஞ்சாதே!” என்ற கூறி, அதனைக் கேட்க ஆசைப்படுகிறேன் என்கிறார் மாணிக்கவாசகர்.

“அஞ்சுவதேன் துணிந்துரைப்போம்! அறிவே “நான்” தெய்வம்!!
  அதுவேதான், வான்காந்தம் அகண்ட மண்டலத்தில்
பஞ்சமில்லா விண்மையப் பகுதி இறை அறிவாம்.
  படர்க்கைநிலை மனம். அதுநாம் பகரும் சீவகாந்தம்.
வஞ்சமிலா சீவகாந்தம், வான் காந்தம் இரண்டே,
  வாழ் உயிர்கள் வான்கோள்கள் வளம் ஒழுங்கு காக்கும்.
பஞ்சபுலன் கவர்ச்சியிலே பழகிக்கொண்ட மனிதன்,
  பரவசமாய் இன்பமுறப் பாடினேன் இவ்வுண்மை!” (அருட்பேராற்றலின் அன்புக்குரல்)

அன்புமிக்க அறிஞர் பெருமக்களே! உங்களில் பலர் அகத்தவப் பயிற்சியாலும், அறநெறி வாழ்வாலும், அகத்தாய்வு முறையாலும் அறிவை தெய்வமாக உணர்ந்து கொண்டீர்கள்.

நீங்கள் அகத்தவப்பயிற்சிக்கு முன்னதாக, கற்பனையால் உருவாக்கப்பட்ட தெய்வக் கருத்து உங்கள் அறிவாட்சித் தரத்தில் பதிவாகியிருப்பதால் இந்தப் பழக்கப் பதிவு நீங்கள் பெற்ற உண்மை விளக்க ஒளியை மேகம் சூரியனை மறைப்பது போல மறைக்கும். விழிப்போடு தொடர்ந்து ஆராய்ந்து அறிவேதான் தெய்வம் என்றுணர்ந்த உண்மையை உரைக்க மனம் கூசும்.

இந்தக் கூச்சத்தை மாற்றித்தான் ஆக வேண்டும். உறுதியாகவும், தெளிவாகவும், அச்சமின்றியும் இப்போது சொல்லுங்கள்.

அறிவே "நான்" தெய்வமே அறிவாக உள்ளது. அதே தெய்வம் வான் காந்தத்தில் இருப்பு நிலையாக உள்ளது என்று மனதை விரித்துக் கூறுங்கள்.

விண்துகள் விரைவாகச் சுழல்வதால் அதன் மையப் பகுதி அசைவில்லா வெற்றிடமாக – இருப்பு நிலையாக உள்ளது.

அந்தப் பகுதியும் தெய்வ நிலையேயாகும். எங்கு எங்கு தெய்வ நிலை இருக்கிறதோ அது அறிவாகவே திகழ்கிறது.

அந்த விண் சுழலியக்கத்திலிருந்து வெளிவரும் அலைதான் உயிருடலுக்குள் சீவகாந்தமாகும்.

எந்த உயிரினத்திலும் சுழன்றியங்கிக் கொண்டிருக்கும் "விண்" துகள்தான் உயிர். உயிர் மையம் தெய்வம்.

அதன் அலைதான் உடல் முழுவதும் விரிவடைந்து சீவகாந்தமாகத் திகழ்கிறது.

இங்கு நன்கு சிந்தனையோடு நினைத்துப் பாருங்கள் உங்கள் உயிர் மையத்தில் உள்ள இருப்பு நிலை தெய்வமாகவும், அதிலிருந்து எழும் காந்த அலை அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் இவையாக தன்மாற்றம் பெறுவதோடு அவற்றையெல்லாம் உணர்ந்து இன்பமாகத் துன்பமாக அனுபவிக்கும் மனமாகவும் இயங்குகிறது.

உயிர் மையத்தில் உள்ள இறைநிலை உயிர்த்துகளுக்கு அப்பாலும் சுற்றியும் உள்ள இறைவெளியோடு கலந்து பேரியக்க மண்டல விரிவான இணைப்போடும் அதற்கும் அப்பால் இருப்பு மண்டலமான இறைவெளியோடும் இணைந்திருக்கிறது.

மனம், மனதின் அடித்தளம் நிலை பொருள் அறிவு; அவ்வறிவின் மூலம், பேரியக்க மண்டலத்தில் தெய்வநிலை.

அறிவே நான் என உணர்ந்தால் அதுவே தெய்வமாக உள்ளது என்பதில் ஐயமேயில்லை.

ஐயமிலாத் தெளிவான அறிவு விளக்கத்தில் உள்ள நீங்கள் ஒவ்வொருவரும் ---

உறுதியாக நீங்கள் அறிந்துள்ள உண்மையினை அறிவேதான் நான், அதுவேதான் அகண்ட இயக்க மண்டலத்தில் வான் காந்தம்,

அதுவே தான் இருப்பு மண்டலத்தில் தெய்வம், பிரம்மம்; உணர்ந்தவர்கள் உறுதியாக எடுத்துரைத்தால்தான் உணராதவர்கள் அறிவு, துளிர்த்து விரிந்து அறிய முனையும்.

மேகத்தில் மறைக்கப்பட்ட சூரியனைப் போல், புகையில் மறைந்திருக்கும் நெருப்பு போல் மனத்துக்குள் மறைந்திருக்கும் இறைநிலை அனைவராலும் உணரப்பெறும்.

மனம், அறிவு, தெய்வம், சீவகாந்தம், வான்காந்தம் இவை தெளிவாக உணரப் பெற்றால் பெரிய இயக்க மண்டலத்தில் உள்ள கோள்கள் அனைத்தும் வான் காந்தத்தால் ஒழுங்காக இயக்கப்படும் காட்சியும்,

சீவகாந்தம் உடலுக்குள் கருமையமாக அமைந்து உடலியக்கம், மன இயக்கம் யாவும் சீராக நடைபெறும் அகக்காட்சியும்...

சிந்தனையாற்றல் மிகுந்த அறிவுக்கு மகிழ்ச்சியும் நிறைவும் அளிக்கும்.

இந்த உண்மை உணரும் வரையில் பேராற்றல் பெற்ற அறிவு ஐம்புலன் உணர்ச்சிகளில் சிக்கித் தோய்ந்து விளைவாக துன்பங்களையும், பொருள் வழி வாழ்வில் சிக்கல்களையும் ஏற்று விடுபடமுடியாமல் திணறித் தவித்து கொண்டிருக்கிறது.

அதே அறிவு தன்னை அறிந்து கொண்டால் அதன் விரிவு நிலையறிந்த தெளிவில் ஐம்புலன்களாலான உணர்ச்சிவயப் பதிவுகளைத் தாண்டி விடுபட்டு இறைவனோடு இணைந்து பேரின்ப நிலையடையும்.

இது எல்லாருக்கும் பொதுவாக இயற்கையில் அமைந்த பேறு ஆகும். நினைவை நிறுத்தி அறிவை உயர்த்தி அதுவே தான் எனவும்,

இறைநிலையே அறிவாகவும் திகழ்கிறது எனவும் உணர்ந்து, தெளிந்து, பரத்தோடு நட்பு கொண்ட நிலையில் மகிழ்ச்சியும், நிறைவும் பெற்றுய்ய இந்த உண்மைகளை கவி வடிவில் பாடியுள்ளேன்.

### நீ நானாய்க் கண்டேன்

இறைவா நான் எனை விடுத்து உனை மதித்தேன்
  எவரெவரோ புனைந்த கற்பனைகள் கொண்டு
நிறைவில்லை என் அறிவோ நிலைக்க வில்லை
  நேர்வழியோ புரியவில்லை நினைந்து ஆழ்ந்தேன்
மறைபொருளாய் இயங்கும் எனதறிவைப் பற்றி
  நானுணர்ந்தேன் அங்கு நீ நானாய்க் கண்டேன்
உறைந்து விட்டேன் உன்னில் நான் உணர்ந்துணர்ந்து
  உலகு இதை உணர்ந்துய்ய தொண்டு ஏற்றேன்." (ஞாக.பா.739)

### ஒப்புதல்

"உன்னில் நான் லயமாகி விழிப்பின் உந்தன்

உறவினிலே பேரின்பம் காணுகின்றேன்
அன்னம் உண்பதைக் குறைத்து அறிவாய் வாழும்
ஆன்மீகப் பயிற்சியினைப் போற்றுகின்றேன்
என்னுள்ளே அகத்ததுவாய் இயங்குகின்ற
ஏற்றமிகும் பேரறிவு அவ்வப்போது
மின்னலது போல் காட்டும் வழி மதித்து
மிகச்சிறந்த தொண்டேற்று நிறைவாய் உள்ளேன்." (ஞாக.பா.729)

தெய்வமே! நான் உன்னோடு கலப்புற்று, விழிப்பு நிலையில் உன்னுடைய உறவினால் பேரின்பத்தை அனுபவிக்கிகன்றேன்.

உணவு உண்பதைக் குறைத்து. அறிவின் கட்டுக்குள் மனதையும், உடலையும் கொண்டு வந்து அறிவாக வாழ்கின்ற ஆன்மீகப் பயிற்சியை நான் போற்றித் துதிக்கின்றேன்.

உடலுக்குள் உயிர், உயிர்க்குள் அறிவு, அந்த அறிவே நீயாகவும், உன்னில் ஒரு பகுதியாகவம இருப்பதை உணர்ந்துவிட்டேன்.

எனக்குள் அகமாக இயங்குகின்ற உயர்வான பேரறிவு, மின்னல் போல அவ்வப்போது வழிகாட்டுகிறது.

அதனை மதித்து தொண்டிலே உயர்ந்த சிறந்த உயிர் அறிவை உள்ளுணர்வாக உயர்த்தும் தொண்டை ஏற்றுள்ளதால் நிறைவாக வாழ்கின்றேன். வாழ்க வளமுடன்.

# துணைநின்ற நூல்கள்.


1. திருவாசகம், புலவர் வீ.சிவஞானம், விஜயா பதிப்பகம், கோவை.
2. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு
3. திருவாசகம், சுவாமி சித்பவானந்தர், திருப்பராய்த்துறை.
4. இணையதள தகவல்கள்.
5. ஞானக்களஞ்சிய கவிகள், இரா. மாரியம்மாள் மோகன்தாஸ், வேதலோக அன்பு நிலையம், பொள்ளாச்சி
6. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000, மன்னார்குடி பானுகுமார். விஜயா பதிப்பகம், கோவை.
7. அருட்பேராற்றலின் அன்புக்குரல், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.
8. மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும், மன்னார்குடி பானுகுமார்.
9. ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேச மஞ்ஞரி, சுவாமி சித்பவானந்தர், ருப்பராய்த்துறை.

10. சுகவாரியும் பேரின்ப ஊற்றும், மன்னார்குடி பானுகுமார். இணையதளம்
11. ஆனந்த களிப்பு, மன்னார்குடி பானுகுமார். அழகுப் பதிப்பகம், சென்னை.